**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**முன்னிலை:– திருமதி.R.தமிழரசி**, B.A.,B.L.,
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை,**
**2025 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 23 ம் நாள் வியாழக்கிழமை**
**I.A.No.02/2025 In O.S.No.89/2017**

முருகேசன் ... மனுதாரர்/வாதி

**//எதிராக//**

1. அர்ஜுனன்
2. நாகம்மாள்
3. நம்பெருமாள் (இறப்பு) ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

1. கமலம்
2. சிவசங்கர்
3. விஜயலெட்சுமி ... உத்தேச தரப்பினர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக 16.10.2025 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.N.மனோகரன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.கிருஷ்ணசாமி அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பிலும் எடுத்துரைத்த வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

இறந்துபோன 3 ம் பிரதிவாதிக்கு உரிய காலத்தில் வாரிசு சேர்க்காமல் ஏற்பட்ட Abatement ஐ ரத்து செய்ய உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 22 விதி 9–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்**

1) மனுதாரர் இவ்வழக்கின் வாதி. இவ்வழக்கு நிலுவையில் இருக்கும போது 3 ம் பிரதிவாதி நம்பெருமாள் 15.03.2024 ல் இறந்து விட்டார். அவருக்கு மனைவியும், மகன் மற்றும் மகள் வாரிசுகள் ஆவார்கள். மேற்படி நபர்களை இவ்வழக்கில் வாரிசுகளாக சேர்த்து வழக்கை நடத்த வேண்டியது அவசியம். உரிய காலத்தில் மேற்படி வாரிசுகளை சேர்க்காததால் இவ்வழக்கு 3 ம் பிரதிவாதிக்கு எதிராக அற்று

போய் விட்டது. மேற்படி அற்று போன இவ்வழக்கை மீண்டும் கோப்புக்கு எடுக்க வேண்டியது அவசியம் என்று இம்மனு தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்</u>

2) 3ம் பிரதிவாதி 15.03.2024ல் இறந்து விட்டார் என்பதற்கான எந்த ஒரு இறப்பு சான்றிதழும் தாக்கல் செய்யவில்லை. 3ம் பிரதிவாதிக்கு மனைவி, மகள் மற்றும் மகன் மட்டுமே வாரிசுகள் என்பதை மனுதாரரே நிரூபிக்க வேண்டுமென எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

3) தற்போது தீர்மானம் செய்யப்பட வேண்டியது இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

<u>தீர்வு</u>

4) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் 3ம் பிரதிவாதி இறந்து விட்டதால் அவரது மனைவி, மகள் மற்றும் மகன் ஆகியோர்களை வாரிசுகளாக சேர்க்க வேண்டுமென மனு தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனு உரிய காலத்தில் தாக்கல் செய்யாததால் மேற்படி வழக்கு அற்று போய் விட்டது என்றும் அதனை ரத்து செய்ய மனு தாக்கல் செய்வதில் காலதாமதமாகி விட்டது என்று வாதிட்டார்.

5) இவ்வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் 3ம் பிரதிவாதி வாரிசுகள் விபரம் கண்டறிய சிறிது காலதாமதம் ஆகிவிட்டது என்று மனுதாரர்கள் தரப்பில் வாதிடுவது ஏற்கத்தக்கதாக உள்ளது. மேலும் இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இம்மனுவை நிபந்தனையின் பேரில் அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதியாக**

இம்மனு அனுமதிக்கப்பட்டு மனுதாரர், எதிர்மனுதாரர்களுக்கு ரூ.500/-ஐ செலவுத்தொகையாக 28.10.2025ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமென்றும், தவறும்பட்சத்தில் இம்மனு தள்ளுபடியாகும் என உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 29.10.2025.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2025ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 23ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

R TAMILARASI Digitally signed by R TAMILARASI

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**

–இல்லை–

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**

–இல்லை–

R TAMILARASI Digitally signed by R TAMILARASI

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

*************************************

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்
குளித்தலை

I.A.No. 02/2025
in
O.S.No. 89/2017

DRAFT / FAIR ORDER

D.D.23.10.2025
*************************************